Commissioner
Chepauk
12 JUN 2012
Chennai-600 005
Land Reforms Dept.

**சுருக்கம்**

நிலச்சீர்திருத்தம் – 2012–13–ஆம் ஆண்டு பகுதி–II திட்டம் – நிலச்சீர்திருத்தத்துறை அலுவலகத்திற்கு லேசர் பிரிண்டருடன் ஐந்து கணினிகள் வழங்குதல் – ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் [நி.சீ.1(2)]த்துறை**

**அரசு ஆணை (1டி) எண்.169**

**நாள்.07.06.2012**

**படிக்கவும்:**

1. முதன்மை செயலாளர்/நிலச்சீர்திருத்த ஆணையர், கடித எண்.A2/11542/2011(நி.சீ), நாள் 24.12.2011.
2. அரசு கடிதம் எண்.2858/நிதி (வரவு–செலவு II)/2012–1, நிதி (வரவு–செலவு–II) துறை, நாள் 20.01.2012.
3. அரசு அ.சா.குறிப்பு எண்.43490/வநி3.1/2011–8, வருவாய் (வநி3.1) துறை, நாள் 25.04.2012.

******

**ஆணை:**

2012–13–ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின்கீழ் நிலச்சீர்திருத்தத் துறை அலுவலகத்திற்கு ரூ.3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) செலவில் லேசர் பிரிண்டருடன் ஐந்து கணினிகள் வாங்குவதற்கு நிலச்சீர்திருத்த ஆணையர் அனுப்பியுள்ள செயற்குறிப்பிற்கு நிதிநிலைக்குழு தனது ஒப்புதலை அளித்துள்ளது.

2. அதன்படி 2012–13–ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின்கீழ் நிலச்சீர்திருத்தத் துறை அலுவலகத்திற்கு லேசர் பிரிண்டருடன் ஐந்து கணினிகள் வாங்க **ரூ.3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)** ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது. இந்த லேசர் பிரிண்டருடன் ஐந்து கணினிகள் வாங்க நடைமுறையில் உள்ள விதிகள் மற்றும் ஆணைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். தேவைப்படும் தொகையையே பயன்படுத்திக் கொண்டு மீதித்தொகை அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

3. மேலே ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்:–

**3475 – 00 ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள் 201 – நிலஉச்சவரம்பு (வேளாண்மை நிலம் நீங்கலாக) – I திட்டத்தில் சேராதது – AD - நிலச்சீர்திருத்தத்துறை இயக்குநர் தலைமையிடப் பணியாளர்கள் – 76. கணினியும் துணைப் பாகங்களும் – 01. வாங்குதல். (கு.தொ.கு.3475–00–201–AD–7619)**

//த.பி.பா//

Verified RealEstate™

4. மேலே ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தைப் பெற்று வழங்க முதன்மைச் செயலாளர்/நிலச்சீர்திருத்த ஆணையர் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தை இந்நிதியாண்டிற்குள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்யப்பட வேண்டும் என்றும், இப்பணிகள் முடிவுற்றதற்கான முடிவுற்ற அறிக்கையை (Completion Report) அரசுக்கு அனுப்ப வேண்டும் என முதன்மைச் செயலாளர்/நிலச்சீர்திருத்த இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 27432/நிதி (வருவாய்)/2012, நாள்: 14.5.2012-இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரமேஷ்ராம் மிஸ்ரா
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**

நிலச்சீர்திருத்த ஆணையர், சென்னை-600 005
சம்பளக்கணக்கு அலுவலர், (கிழக்கு) சென்னை-600 008
மாநிலத்தலைமை கணக்காயர், சென்னை-600 018
மாநிலத்தலைமை கணக்காயர், (தணிக்கை) சென்னை-600 018

**நகல்**

வருவாய் (வ.நி.3) துறை, சென்னை- 600 009
நிதி(வருவாய்/வரவு-செலவு-II)/பொ.ப)துறை, சென்னை-600 009
இருப்பு கோப்பு / உபரி நகல்கள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

வை.க.பன்னீர்செல்வம் 7/6/12
பிரிவு அலுவலர்.

Verified @ RealEstate™